# மின்ஊழியர் மத்திய அமைப்பின் ஸ்தாபன விரிவாக்க பட்டறையில் முன்வைக்கப்பட வேண்டிய குறிப்பு

2014 ஜூலை 10-லிருந்து 14 வரை பெல்லாரியில் நடைபெற்ற சிஐடியு-வின் அகில இந்திய பொதுக்குழு கூட்டத்தில் எதிர்கால ஸ்தாபன கடமையாக முன்வைக்கப்பட்ட, திரட்டப்பட்ட துறை, பொதுத்துறை, மற்றும் தனியார் துறையில் ஸ்தாபன பலம் குறைந்து வருகிறது. நவீன திரட்டப்பட்டத் துறையில் வேலை நிறுத்தம் மூலம் நமது தலையீடு, ஆற்றல் என்பது குறைந்து வருகிறது என்பதை குறிப்பிட்டு இதை போக்கும் வகையில் திரட்டப்பட்டத்துறை, பொதுத்துறையில் நமது ஸ்தாபன பலத்தை அதிகரிக்க வேண்டும் என்ற முடிவின் அடிப்படையிலும், சிஐடியு தமிழ்மாநிலக்குழு நமது ஸ்தாபன பலத்தை உயர்த்த வேண்டும் என்ற அடிப்படையில் ஸ்தாபன இடைக்கால பரிசீலனை நடத்திட வேண்டும் என்ற அடிப்படையில் மின்ஊழியர் மத்திய அமைப்பின் ஸ்தாபன இடைக்கால பரிசீலனையை நடத்திட வேண்டும், ஸ்தாபன பரிசீலனைக்கு முன்பாக ஒரு விரிவான பட்டறைகள் நடத்தி கருத்துக்களைப் பெற்று ஸ்தாபன பரிசீலனையை நடத்துவதற்கே கீழ்கண்ட குறிப்பு முன்வைக்கப்படுகிறது.

1970ல் ஒன்றுபடு, போராடு என்ற முழுக்கத்தை முன்வைத்து துவங்கிய மத்திய அமைப்பு, இந்த முழக்கத்தை முற்றிலுமாக நிறைவேற்றும் அமைப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழக மின்துறையில் துவங்கிய மின்ஊழியர் மத்திய அமைப்பு பல சாதனைகளை புரிந்துள்ளது. மின்வாரிய ஊழியர்கள் அடிமைகள் அல்ல அனைத்து உரிமைகளையும் பெற்று சமூக வளர்ச்சிக்காக பாடுபவர்கள் என்பதை நிருபிக்கும் அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் மின்ஊழியர் மத்திய அமைப்பு மின் ஊழியர்களின் உரிமையைக் காக்கும் நிலையாணை விதிகளை பெற்றுத் தந்தது மத்திய அமைப்பு, குறைந்தபட்ச ஊதியம் ரூபாய் 18/-ல் இருந்து இன்றைக்கு குறைந்தபட்சம் ரூ. 4900/- ஆக மாற்றியது மின்ஊழியர் மத்திய அமைப்பு. மின்வாரிய ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கும் பஞ்சப்படியை பெற்றுத் தந்ததோடு இன்று பெறும் 20% போனசை உத்தரவாதப்படுத்தியது மத்திய அமைப்பு.

மின்வாரியத்தில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான ஒப்பந்த தொழிலாளிகளையும், பகுதி நேர ஊழியர்களையும் பணிநிரந்தரம் செய்த அமைப்பு மின்ஊழியர் மத்திய அமைப்பு.

அவசர நிலைகாலத்திலும் மின்வாரியத்தில் அடக்குமுறை கோலோச்சியபோதிலும், அதை உறுதியாக எதிர்த்து நின்று முறியடித்த அமைப்பு மின்ஊழியர் மத்திய அமைப்பு.

மத்திய அரசு 2002 ஆம் ஆண்டு கால கட்டங்களில் திரட்டப்பட்டத்துறை, பொதுத்துறை அரசு ஊழியர்களுக்கு அளித்து வந்த ஓய்வூதிய பயன்களை வெட்டி சுருக்கியது. ஓய்வு கால பலன்களை மத்திய அரசு வெட்டி சுருக்கியதை பயன்படுத்தி அப்போது ஆண்ட அதிமுக அரசு மாநில அரசு ஊழியர்களின் ஓய்வு கால பணப்பயன்களை வெட்டிச் சுருக்கியது அதை மின்வாரியத்திலும் அமல்படுத்த முயற்சித்தப் போது உச்ச நீதிமன்றம் வரை சென்று மத்திய மாநில அரசு ஊழியர்கள் இழந்த சலுகையை மின்வாரியத்தில் கட்டிக்காத்த அமைப்பு மின்ஊழியர் மத்திய அமைப்பு.

நவீன தாராளமயக் கொள்கையை மின்துறையில் அமலாக்கும் விதமாக மின்சார சட்டம் 2003ஐ பயன்படுத்தி தமிழக மின்வாரியத்தை பிரிக்கின்ற முயற்சியை தமிழக அரசும் வாரியமும் எடுத்த போது தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு கூட்டாகவும், சுயேட்சையாகவும் நடத்திய போராட்டத்தின் விளைவே பல மாநிலங்களில் மின்வாரியத்தை பிரித்து தனியாரிடம் தாரை வார்க்கும் முயற்சியை தமிழகத்தில் இதுவரை அமல்படுத்தாமல் காத்த பெருமை மின்ஊழியர் மத்திய அமைப்பையே சாரும்.

மின்ஊழியர் மத்திய அமைப்பு துவங்கி செயல்பட ஆரம்பித்த பின்னர் ஊழியர்களின் நலன்கள், உரிமைகளை பாதுகாக்க பல பிரம்மாண்டமான இயக்கங்களை நடத்தியதன் வாயிலாகவே மேற்கூறிய சாதனைகளை மின்வாரியத்தில் படைத்துள்ளோம் என்பதை இப்பட்டறையில் அழுத்தமாக கொண்டு செல்ல வேண்டியது.

மின்ஊழியர் மத்திய அமைப்பு கடந்த 40 ஆண்டு கால பணிகளின் மின்வாரிய ஊழியர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது என்பதை யாராலும் மறுக்க இயலாது.

அப்படி சாதனைகள் பல படைத்த மின்ஊழியர் மத்திய அமைப்பு ஸ்தாபன பலத்தை பலப்படுத்தி விரிவு படுத்துவதிலும் முன்னணியில் நின்றுள்ளது. சில நூறு உறுப்பினர்களை கொண்டு துவங்கிய மத்திய அமைப்பு 30,000 உறுப்பினர்களை தொட்ட நிகழ்வும் நடந்துள்ளது. அதாவது பணியாற்றும் ஊழியர்களில் சுமார் 30 சதவீதம் உறுப்பினர்களை தன்னகத்தே கொண்ட அமைப்பாக செயல்பட்டு வருகிறது. இருந்த போதிலும் கடந்த சில ஆண்டுகளில் ஸ்தாபன விரிவாக்கத்தில் தேக்கமும், உறுப்பினர் எண்ணிக்கையில் சிறிது குறைகின்ற நிகழ்வும் நடந்துள்ளன. இவைகளை போக்கி ஸ்தாபன விரிவாக்கத்தை உறுதிப்படுத்திட வேண்டியுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் உறுப்பினர் எண்ணிக்கையை பரிசீலிக்கின்ற போது 2011 ஆம் ஆண்டில் 15,000 நிரந்தர ஊழியர்களும், 12,000 ஒப்பந்த ஊழியர்களும் இணைந்து உறுப்பினர் எண்ணிக்கையை 27,000 ஆக இருந்தது. 2012 ஆம் ஆண்டில் நிரந்தர தொழிலாளிகளின் எண்ணிக்கை 18500 ஆகவும், ஒப்பந்த தொழிலாளிகளின் எண்ணிக்கை 6500 ஆகவும் ஒட்டு மொத்தமாக 25,000 ஆகவும், 2013 ஆம் ஆண்டில் நிரந்தர தொழிலாளர்களின் எண்ணிக்கை 19,500 ஆகவும், ஒப்பந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை 4500 ஆகவும் மொத்தமாக 24,000 உறுப்பினராகவும் உள்ளது.

இந்த உறுப்பினர் புள்ளி விவரத்தை பரிசீலிக்கும்போது நிரந்தர தொழிலாளர் எண்ணிக்கையில் 4500 வரை உயர்வு ஏற்பட்டுள்ளது. இது ஒரு சாதகமான அம்சம் ஆனால் இக் காலகட்டத்தில் 20,000க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் நமது முன்முயற்சியின் காரணமாக பணிநிரந்தரப்பட்டனர். மேலும் 5000க்கும் மேற்பட்ட பகுதி நேர ஊழியர்களும் நமது முயற்சியின் காரணமாக பணிநிரந்தரம் செய்யப்பட்டனர். இவ்வாறு நமது முயற்சியின் காரணமாக பணிநிரந்தரம் செய்யப்பட்டவர்கள் 65 சதவீதத்திற்கு கூட நமது ஸ்தாபனத்தோடு இணைக்க இயலவில்லை என்ற விமர்சனம் உள்ளது. இதில் ஒப்பந்த தொழிலாளிகளிலிருந்து மஸ்துாராக பதவி உயர்வு பெற்றவர்களை 50 சதவீதம் மட்டுமே நமது ஸ்தாபனத்தில் இணைக்க முடிந்துள்ளது என்பதை கவலையோடு பார்க்க வேண்டியுள்ளது.

பகுதி நேர ஊழியர்களை பொருத்த மட்டில் நமது முன்முயற்சியால் பணி நிரந்தரம் செய்யப்பட்டதில் ஒரு 65% உறுப்பினர்களை நமது ஸ்தாபனத்தில் இணைக்க முடிந்துள்ளதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. மஸ்தூர்களாகவும், பகுதி நேர ஊழியர்களாவம், நமது முயற்சியால் பணி நிரந்தரப்படுத்தப் பட்டவர்களில் 50

சதவீதம் ஊழியர்களைத் தான் இணைக்க முடிந்துள்ளது என்பதை கவலையோடு பார்க்க வேண்டியுள்ளது. இதில் மஸ்துார் ஆனவர்களில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினர் இதர தொழிற் சங்கத்தை சார்ந்தவர்களாக உள்ளார்கள் என்பதை மறுக்க முடியாது.

ஆனால் பகுதி நேர ஊழியர்களை பொருத்த வரையில் முழுக்க முழுக்க நாம் எடுத்த பெரும் முயற்சியின் விளைவாகத் தான் அவர்களுக்கு வாழ்வாதாரம் ஏற்பட்டுள்ளது என்பதை அவர்களே உணர்ந்துள்ள நிலையிலும், கூட நமது ஸ்தாபன செயல்பாட்டில் உள்ள குறைகளினாலேயே அவர்களை நமது ஸ்தாபனத்தில் முழுமையாக இணைக்க தவறியுள்ளோம் என்பதை கவலையோடு பரிசீலித்து தீர்வு காண வேண்டியுள்ளது. பட்டறையிலே பேசுகின்ற தோழர்கள் தங்களது கிளையில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களின் எண்ணிக்கையும், நமது ஸ்தாபனத்தில் இணைக்கப்பட்டவர்கள் தவிர மீதமுள்ளவர்களை நம்மால் ஏன் இணைக்க முடியவில்லை என்ற விவரத்தையும் பகிர்ந்து நிவாரணம் காண வேண்டியுள்ளது.

ஒட்டு மொத்த உறுப்பினர் எண்ணிக்கை குறைவுக்கு பங்கு அளிக்கும் காரணமாக உள்ளது ஒப்பந்த தொழிலாளர்களின் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்துள்ளதும் ஒரு காரணமாக இருந்துள்ளது. இப்போது 2013ல் நமது ஸ்தாபன புள்ளி விவரப்படி 4500 ஒப்பந்த தொழிலாளர்கள் என்று இருந்த போதிலும் வாரியத்தின் கணக்குப்படி 150க்கு குறைவான ஒப்பந்த தொழிலாளர்களே உள்ளதாக குறிப்பிடுகின்றனர்.

விநியோகப் பகுதியில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையை தக்க வைத்த போதிலும் அனல் மின் நிலையத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளிகளை ஸ்தாபனப்படுத்தியதை தொடர்ந்து தக்க வைக்க முடியாத ஸ்தாபன குறைபாடும் உள்ளது.

தொழிற் கல்வி பயின்ற பணியாளர்களை நமது ஸ்தாபனத்தில் முழுமையாக இணைப்பதில் தொடர்ச்சியான பலவீனம் உள்ளது. அவர்களது கோரிக்கைகளில் கவனம் செலுத்துவதிலும், தீர்த்து வைப்பதிலும் மாநில மையம் முணைப்பும் காட்டி வெற்றி பெறுவதை தமிழகம் முழுவதும் அப்பகுதி ஊழியர்கள் மத்தியில் கொண்டு சென்று அவர்களை ஸ்தாபன மாக்குவதில் கிளைகள் மத்தியில் ஏற்ற இறக்கங்கள் உள்ளன.

களப்பிரிவு இதர பிரிவு ஊழியர்களான ஆக்க முகவர்கள், முகவர் முதல் நிலை, மின்பாதை ஆய்வாளர், கம்பியாளர், வணிக ஆய்வாளர், வணிக உதவியாளர் அவர்களில் பணியாற்றும் ஊழியர்களில் 20 சதவீதத்திற்கும் குறைவாகவே நமது ஸ்தாபனத்தில் இணைக்க முடிந்துள்ளது என்பதையும் பரிசீலித்து இதிலும் மாற்றம் காண வேண்டியுள்ளது.

நமது உறுப்பினர் எண்ணிக்கையில் 90 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் களப்பிரிவு ஊழியர்களாகவே உள்ளனர். அடுத்து 5 சதவீதத்திற்கும் குறைவாக கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களும், இதர பகுதி ஊழியர்கள், கணக்கு, நிர்வாகம், பண்டகசாலை, தணிக்கை போன்ற பகுதிகளில் உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்த சதவீதத்தில் ஒன்று அல்லது இரண்டு சதவீதமாகவே உள்ளனர். ஆனால் மாநில மையத்தின் செயல்பாடு என்பது இக்குறைவான உறுப்பினர் ஊழியர்களின் பிரச்சனைகளை கையாளும் மையமாகவே உள்ளது.

நமது பணிக்கும் அவர்களை ஸ்தாபனப்படுத்துவதற்கும் ஒரு பெரிய இடைவெளி உள்ளதை கூர்ந்து பரிசீலித்து அதில் மாற்றம் காணும் வகையில் திட்டத்தின் செயல்பாட்டை தேவையான மாற்றங்களை காண வேண்டியுள்ளது.

கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களின் பிரச்னைகளை கையில் எடுப்பது நிர்வாகத்திற்கு கொண்டு சென்று தீர்வு காண்பது. அதை அப்பகுதி ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் பணியை அப்பிரிவுக்காக அமைக்கப்பட்ட குழு பணியாற்றி உள்ளதால், அதில் ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்க முடிந்துள்ளது. அவர்களை ஸ்தாபனப்படுத்துவதிலும் சிறிது முன்னேற்றம் உள்ளது. அது நமது ஸ்தாபன பலத்தை விரிவாக்க உதவிகரமாக அமைந்துள்ளது.

மின்ஊழியர் மத்திய அமைப்பின் பணிகளை அனைத்துப் பிரிவு ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் கேட்டகிரிக்குழுக்கள் அமைக்கப்பட்டன. ஆனால் கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களுக்கான குழுவும், களப்பிரிவு ஊழியர்களுக்கான குழுக் கூட்டங்களே நடத்தி சில கோரிக்கைகள் சம்மந்தமாக விவாதித்து அதை ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் பணி நடைபெற்றுள்ளது.

மேலும் அனல், புனல், பொது கட்டுமான மின்வட்ட ஊழியர்களுக்கான குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அதில் அப்பகுதி ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக விவாதித்து, கோரிக்கைகளை பட்டியலிட்டு வாரியத்திற்கு அளித்து பேச்சு வார்த்தை இயக்கங்கள் நடத்தி, ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளது. ஒரு சில திட்டங்களைத் தவிர பெரும்பாலான உற்பத்தி வட்டங்களில் நாம் எடுத்த முயற்சி, அதில் ஏற்பட்ட பலன் அதன் மூலம் விரிவாக்கம் செய்வதற்கு பதிலாக அங்குள்ள ஸ்தாபன பிரச்னைகளின் காரணமாக ஸ்தாபனத்தில் தேக்கமே நீடிக்கின்றது. குறிப்பாக அனல் மின் திட்டங்களில் உள்ள ஸ்தாபன பிரச்னைகள் சம்மந்தமாக பேசப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது. இதை ஸ்தாபன விரிவாக்கத்திற்கு அங்குள்ளவர்கள் பயன்படுத்திட வேண்டியுள்ளது.

இதர பகுதி ஊழியர்கள் குழுக்களான ஒப்பந்த ஊழியர்கள், கணக்குப்பிரிவு, நிர்வாகப்பிரிவு, பண்டகசாலைப் பிரிவு, குடும்பநல பாதுகாப்பு திட்டக் குழுக்களின் கூட்டங்கள் நடத்துவதில் தேக்கமே நீடிக்கின்றது. இது உடனடியாக நடத்தி பகுதிவாரியான கோரிக்கைகளை பட்டியலிடுவது. நிர்வாகத்திடம் கொண்டு செல்வது. அதில் ஏற்படும் மாற்றங்களை அப்பகுதி ஊழியர்கள் மத்தியில் கொண்டு சென்று அவர்களை வென்றெடுக்க முடியும். குழுக் கூட்டங்கள் கூடாத போதே மாநில மையத்தின் பெரும்பாலான பணி அப்பகுதி ஊழியர்களின் பிரச்னையை கையில் எடுப்பதும், தீர்ப்பதும் நடந்து கொண்டுள்ளது . மாநில மையத்தில் நடைபெறுகின்ற பணிகளை ஸ்தாபனப்படுத்துவதில் அக்குழுக் கூட்டங்களை நடத்துவதன் மூலமே வெற்றி காண முடியும்.

உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்பு குழுவை பொருத்த மட்டில் தேக்கநிலை நீடிக்கின்றது. மாநாடுகள் உழைக்கும் பெண்கள் மாநிலக்குழு கூட்டங்கள் நல்ல முறையில் நடைபெற்ற போதிலும் திட்டவாரியாக உழைக்கும் மகளீரை ஸ்தாபனப்படுத்துவது, அவர்களைக் கொண்டு மாவட்டவாரியாக குழுக் கூட்டங்களை நடத்தி உழைக்கும் பெண்கள் ஸ்தாபன செயல்பாட்டை உத்தரவாதப்படுத்தும் பணியை பல கூட்டங்களில் பேசிய பின்னரும், இருக்கின்ற சுணக்க நிலையை களைந்து செயலாற்றிட வேண்டியுள்ளது. மின்வாரியத்தில் அதிகரிக்கும் பெண் ஊழியர்களின் எண்ணிக்கையும், இதர தொழிற் சங்கங்கள் இப்பகுதி ஊழியர்களை திரட்டுவதில் எடுக்கும் நடவடிக்கையை கருத்தில் கொண்டு நமது பணியை அமைத்திட வேண்டியுள்ளது.

## தமிழகத்தில் மின்துறை பொறியாளர் அமைப்பு

மின்ஊழியர் மத்திய அமைப்பு முயற்சி எடுத்து மின்துறையில் பணியாற்றும் பட்டம், பட்டயம் படித்த இருவரையும் ஸ்தாபனப்படுத்தும் விதமாக மின்துறை பொறியாளர் அமைப்பு துவங்கி செயல்பட்டு வருகிறது. அந்த அமைப்பின் மூன்றாவது மாநில மாநாட்டிற்கு பிறகு அவர்களது செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதை பயன்படுத்தி தமிழக மின்துறையில் பணியாற்றும் பொறியாளர்களை விரிவான முறையில் ஸ்தாபனப்படுத்த வேண்டியுள்ளது.

## மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பு

தமிழக மின்வாரியத்தில் பணியாற்றி பணி ஓய்வு பெறுகின்ற ஊழியர்களின் நலன்களை பாதுகாக்கின்ற வகையில் மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பு துவங்கி சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. அவர்களின் செயல்பாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் ஸ்தாபனத்திற்கு வலுசேர்க்கும் வகையில் உள்ளது என்பதையும் கணக்கில் கொண்டு ஓய்வு பெற்றோர் நல அமைப்பை மேலும் விரிவாக்கம் செய்யும் கடமை நம்முன்னால் உள்ளது.

கேட்டகிரி வாரியான மாநிலந் தழுவிய நிலையில் உள்ள குழுக் கூட்டங்களின் செயல்பாட்டை துரிதப்படுத்தும் அதே காலகட்டத்தில் கேட்டகிரிவாரியான குழுக் கூட்டங்களை திட்டவாரியான குழுக் கூட்டங்களை திட்டவாரியாக அமைப்பதன் மூலமே நமது நோக்கம் நிறைவேறும் ஓரிரு திட்டங்களே மாவட்ட வாரியான குழுக் கூட்டங்களை அமைக்க முயற்சி மேற்கொண்டுள்ளனர். ஆனால் இதர வட்டங்களில் அப்படிப்பட்ட முயற்சியே இல்லை என்பதை பரிசீலித்து மாற்றங்கள் காண வேண்டியுள்ளது.

மின்ஊழியர் மத்திய அமைப்புக்கும், மின்வாரிய ஊழியர்களுக்கும் நெருக்கத்தை உருவாக்குவது கோட்ட செயல்பாடே என்பதை உணர்ந்து தான் கோட்டக்குழுக்களை அமைத்து கோட்ட நிர்வாகிகளை கொண்டு செயல்பட வைக்க வேண்டும் என்று முடிவு செய்தோம். ஆனால் தமிழகத்தில் ஒரு சில விரல்விட்டு எண்ணக்கூடிய கிளைகளே மற்ற கிளைகளில் அதற்கான முயற்சி என்பது இல்லை என்று சொல்லலாம். கோட்ட கமிட்டிகளை செயல்பட வைப்பது என்று நாமே நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு கூட்டங்களில் முடிவு செய்த பின்னரும் அதை

அமலாக்காத போக்கு ஸ்தாபன விரிவாக்கத்திற்கு உதவாது. கோட்ட கமிட்டிகளை கோட்ட நிர்வாகிகளைக் கொண்டு செயல்பட வைப்பது என்பது ஸ்தாபன விரிவாக்கத்திற்கும் இரண்டாம் கட்ட ஊழியர்களை வென்றெடுப்பதற்கும் உதவும். அந்த வகையில் கோட்டங்களை செயல்பட வைப்பதில் உள்ள பிரச்னைகளை இப்பட்டறையில் விவாதித்து மாற்றங்களை உருவாக்கிட வேண்டும்.

மேற்கூறியவைகளை எல்லாம் நாம் மாநில நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு கூட்டங்களில் வைத்து விவாதித்து பலமுடிவுகளை எடுத்துள்ளோம். இந்த விவரத்தை விரிவாகக் கொண்டு சென்று கருத்துக்களைப் பெற்று அவைகளை இடைக்கால ஸ்தாபன பரிசீலனையாக நடத்தி மாற்றங்களை உருவாக்கும் வகையில் இக்குறிப்பை முழுமைப்படுத்திட வேண்டுகிறோம்.

**குறிப்பு**

1. வகுப்புக்கான நிகழ்ச்சிநிரல் குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் வகுப்புகளை நடத்திட வேண்டும்.
2. 500 உறுப்பினர்களுக்கும் குறைவாக உள்ள கிளைகள் அதை 750ஆக உயர்த்திடவும், 1000 மற்றும் அதற்கு மேலாக உறுப்பினர்கள் உள்ள கிளைகள் 15% உறுப்பினர்களையும் வரும் அக்டோபர் மாதம் முடிவதற்குள் உயர்த்தும் ஆலோசனையையும் முன்வைக்க வேண்டும்.
3. மாலை அமர்வில் குழுவிவாதத்திற்கு அந்த மையத்தில் உள்ள வட்டங்களின் எண்ணிக்கை அடிப்படையில் குழு நியமணம் செய்திட வேண்டும். அக்குழுவை மாநில நிர்வாகிகளோ, கிளைச் செயலாளரோ இல்லாத ஒருவரை தலைவராக நியமித்திட வேண்டும்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


## 27.07.2014 அன்று நடைபெற உள்ள வகுப்புக்கான நிகழ்ச்சி நிரல்

**காலை அமர்வு**

| | | |
|---|---|---|
| துவக்கம் | : | காலை 11.00 மணிக்கு |
| காலை அமர்வு நிறைவு | : | பிற்பகல் 1.00 மணிக்கு |

**இரண்டாம் அமர்வு**

| | | |
|---|---|---|
| பொருள் முன்மொழிவு<br>மத்திய அமைப்பின் வரலாறு | : | பிற்பகல் 1.05 முதல் 1.45 வரை |
| மத்திய அமைப்பு விரிவாக்கம்<br>சம்மந்தமான அறிக்கை<br>முன்மொழிதல் | : | பிற்பகல் 1.50 முதல் 2.15 வரை |

மதிய உணவு இடைவேளை
பிற்பகல் 2.15 முதல் 3.00 வரை

| | | |
|---|---|---|
| குழுவிவாதம் | : | மாலை 3.05 முதல் 3.45 வரை |
| குழு தலைவர்களின் ரிப்போர்டிங் | : | 3.50 முதல் 4.30 வரை |
| தொகுப்புரை | : | 4.35 முதல் 5.20 வரை |

**நிகழ்ச்சி நிரல் நிறைவு**